1984 பிப்ரவரி 15]

RE[illegible] SECTION (Council)

மன்னார்குடியில் பனைப்பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

*வினா எண் 20.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடியில் பனைப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவிடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது நிறுவப்படும் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) இச் செயற்குறிப்பு பற்றி சமூக நல இயக்குனர், கதர் மற்றும் கிராம கைத்தொழில் வாரியத்துடன் கலந்து ஆலோசித்து வருகிறார்.

(இ) விரைவில் முடிவு எடுக்கப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கின்ற பனைப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில் வெளி நாட்டார் விரும்புகிற வகையில் பனை ஓலையிலே அழகிய வண்ணங்களினால் ஆன கூடைகள் தயாரிக்கிற முயற்சி போன்றவை மேற்கொள்ள இருக்கிறார்களா ? அதோடு பனங்கற்கண்டு சுவையானது என்கிறார்கள். அதை அழகிய பெட்டிகளிலே விற்கின்ற முயற்சியை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மேலவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, தஞ்சாவூர் மாவட்டத்தில் மன்னார்குடியில் பனைப் பொருட்கள் தொழிற்சாலை ஒன்று நிறுவப்படுவது குறித்தது. மற்ற இடங்களைப் பற்றிய விவரம் இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]